பக்கங்கள்: பத்து
Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6-00

ஈழ 14 வள்ளுவர் ஆண்டு2030 சித்திரை 15 புதன்கிழமை (28-04-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்130

# யுத்தம் நிறுத்தப்படமாட்டாது என்று ஜனாதிபதி நேரடியாகத் தெரிவிப்பு!

## வன்னி சென்று திரும்பிய சர்வ மத பிரதிநிதிகளிடம்

கொழும்பு, ஏப்ரல் 28

"யுத்தம் எக்காரணம் கொண்டும் நிறுத்தப்படமாட்டாது. அது தொடர்ந்து மேற்கொள்ளப்படும்."

— இவ்வாறு வன்னியில் புலிகளுடன் பேச்சு நடத்தி விட்டுத் திரும்பிய தென்னிலங்கையைச் சேர்ந்த சர்வமதப் பிரதிநிதிகள் குழுவிடம் நேரடியாகத் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

நேற்று முன்தினம் மாலையில் கொழும்பு அலரிமாளிகையில் தம்மைச் சந்தித்த சர்வமதப்பிரதிநிதிகள் குழுவிடமே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

தென்னிலங்கையிலிருந்து சர்வமத பிரதிநிதிகளைக் கொண்ட — 28 உறுப்பினர்கள் அடங்கிய — சமாதானத் தூதுக்குழு ஒன்று கடந்த பெப்ரவரி 9 ஆம் திகதி இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பிரதேசத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் பிரார்த்தனை

வவுனியா, ஏப்ரல் 28

மடுத் தேவாலயத்தில் நிலை கொண்டுள்ள படையினரை வாபஸ் பெறவேண்டும் என்று கோரி புதுக்குடியிருப்பு குழந்தையேசு ஆலயத்தில் நேற்று பிரார்த்தனையும் உபவாசமும் இடம்பெற்றது.

மதகுருமார்கள் பொதுமக்கள், மாணவர்கள் என ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இதில் பங்குபற்றினர்.

## இளைஞர் பிடிக்கப்பட்டார்

தமிழ் இயக்கம் ஒன்றின் அடையாள அட்டையை பயன்படுத்தி தென்மராட்சிப் பிரதேசத்தின் பல இடங்

[10 ஆம் பக்கம் பார்க்க]

### யாழ். நகர மத்தியில்

## தடைசெய்யப்பட்ட வீதி மீண்டும் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

கடந்த ஒரு வருடத்துக்கு மேல் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த — யாழ். ஸ்ரான்லி வீதியையும், மின்சார நிலைய வீதியையும், இணைக்கும் — பாதை போக்குவரத்துக்கு நேற்று முன்தினம் திறக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் போக்குவரத்து வசதி கருதி மேற்படி பாதையைத் திறக்குமாறு திணைக்களத் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து யாழ். நகரத் தளபதி இந்தப் பாதையைப் போக்குவரத்துக்கு அனுமதித்துள்ளார்.

இப்பாதை ஊடாகப் பெரிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவிலிருந்து

## உயிலங்குளம் ஊடாக இன்று 2,000பேர் செல்வர்

வவுனியா, ஏப்ரல் 28

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் இருந்து வவுனியாவுக்கு வந்து மீண்டும் திரும்ப முடியாது நிர்க்கதி நிலையில் இருந்த இரண்டாயிரம்பயணிகள் இன்று உயிலங்குளம் பாதையூடாக செல்ல அனுமதிக்கப்படவிருக்கின்றனர்.

உயிலங்குளம் பாதை ஊடாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குச் செல்வதற்கு படையினர் தரப்பில் தடை விதிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அங்கு திரும்ப முடியாத நிலையில் இரண்டாயிரத்துக்கு

[10 ஆம் பக்கம் பார்க்க]

### சம்பள முரண்பாடு, ஒய்வூதிய விவகாரம்:

## பல்கலைக்கழக ஊழியர் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர்

கொழும்பு ஏப்ரல் 28

சம்பள முரண்பாட்டை நீக்குதல் ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

பல்கலைக்கழக ஊழியர் சங்க சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்படும் இந்த வேலைநிறுத்தத்தால்சகல பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளும் ஸ்தம்பித்துள்ளன.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக போதனை சாரா ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இதன் காரணமாக பல்கலைக்கழகத்தின் சகல செயற்பாடுகளும் சீர்குலைத்துள்ளன.

எனினும் நீர் விநியோகம் பாதுகாப்பு ஆகிய பிரிவுகளின் செயற்பாடுகள் தொடர்ந்து இடம் பெறுகின்றன.

மருத்துவ பீடத்தில் இடம் பெறும் பரீட்சைகளும் தடையின்றித் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இதேவேளை—

போதனை சாரா ஊழியர்கள் நடத்தி வரும் போராட்டத்துக்கு தாம் தார்மீக ஆதரவு வழங்குவதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் நேற்றுத் தகவல் வெளியிட்டது.

பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகள் சங்கமும்மேற்படி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு ஈ.பி.டி.பியினர் பிணையில்செல்லஅனுமதி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

நெடுந்தீவில் உள்ள நான்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை தலா 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல ஊர்காவற்றுறை மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

நெடுந்தீவில் உள்ள ஈ.பி.டி.பி. முகாம் ஒன்றில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலியான இராமசாமி ஆறுமுகம் என்பவரின் சடலத்தை சட்டபூர்வ மரண விசாரணையின்றி தகனம் செய்தது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நான்கு ஈ.பி.டி.பி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை நாளை முடிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள கொழும்பில் இருந்து வந்த குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகளின் விசாரணைகள் நாளைமுடிவடையவிருக்கின்றன.

இதுவரை சாட்சியம் அளிக்காதவர்கள் இன்று அல்லது நாளை பொலீஸ் நிலையம் சென்று தமது சாட்சியங்களைப் பதியுமாறு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் கேட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

(உ-3)

## செஞ். செயலர் கிஷோர் தொடர்ந்துவிசாரணையில்

வவுனியா, ஏப்ரல் 28

வவுனியா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு—கிழக்கு மாகாண இணைப்பாளரும் வவுனியாக்கிளைச் செயலாளருமான சிவநாதன் கிஷோர் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

செஞ்சிலுவைச் சங்க வவுனியாச் கிளையில் தற்காலிக சாரதியாகப் பணிபுரியும் இராஜதுரை கணேஷ் என்பவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

அதேநேரம்—

தடுத்து வைக்கப்பட்டுள்ள கிஷோரை அவரது மனைவியான சுகந்தி கிஷோர் நேரில் சென்று பார்க்க படையினர் நேற்று அனுமதி வழங்கியதை அடுத்து நேற்று நண்பகல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மகஜரை ஏற்பதற்கு ஐ.நா. தூதரகம் மறுப்பு

வவுனியா, ஏப்ரல் 28

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிக்கான போக்குவரத்துத் தடையை நீக்கக் கோரி ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு விலாசமிடப்பட்ட மகஜரை ஏற்க மல்லாவியில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மறுத்து விட்டதாகப் "புலிகளின் குரல்" வானொலி தெரிவித்துள்ளது.

வன்னிப் பிரஜைகள் குழுவின் பிரமுகர்கள் மல்லாவியில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அலுவலகத்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## நெடுந்தீவில் கரை ஒதுங்கிய 3 மன்னார் மீனவரையும் திருப்பி அனுப்ப உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

கடந்த வாரம் புதன்கிழமையன்று நெடுந்தீவில் கரையொதுங்கிய 3 மன்னார் மீனவர்களும், அவர்களது கண்ணாடி இழைப் படகும் கடற்படையினரின் உதவியுடன் மன்னாருக்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும் என யாழ். மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி மீனவர்கள் மூவரும் ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் யாழ். நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டபோதே நீதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுவிக்கப்பட்ட மூவர் கப்பலில் வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

யாழ் மாநகரசபை குண்டு வெடிப்புத்தொடர்பாக மேலதிக விசாரணைக்கென கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட மாநகரசபை ஊழியர்களில் மூவர் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

தம்பிப்பிள்ளை விமலச்சந்திரன், மங்களேஸ்வரம் தேவசிங்கம், கந்தையா சண்முகபதி ஆகிய மூவருமே வந்து சேர்ந்தவர்களாவர்.

மேலதிக விசாரணைக்கென கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட நால்வரில் ஒருவர் இதற்கு முன்பே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

அல்வாய் சாமணந்துறை
ஆலடிப் பிள்ளையார் கோயில்
பூங்காவனத் திருவிழாவில்
இந்து இளைஞர் மன்றம்
நடத்தும்
''ராஜன்ஸ்'' இசைக்குழுவின் ஆணிவேர் கலைஞர்களும்
ரூபவாகினி புகழ் கலைஞர்களும்
இணைந்து வழங்கும்
யாழ். வாசனின்
''சாரங்கா இசைக்குழு''
வழங்கும்
ராஜ ராகம்
காலம்; 01 - 05 - 99 சனிக்கிழமை இரவு
நிகழ்ச்சித் தொடுப்பு: மணிக்குரல் V S. சற்குணன்
(9524)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி சக மாணவி
ஆ. பிரபாலினி
அவர்களின் அருமைத் தந்தை

## முருகேசு ஆறுமுகம்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

மாணவர் மன்றம்,
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

(65239)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ருக்குமணிதேவி பாலகிருஷ்ணன்
அவர்களின் அன்புத் தந்தையார்

## தா. சுப்பிரமணியம்

அவர்களது மறைவினால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணக்கர்.
யாழ்/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

(65237)

# நிர்மாணத்துறைத் திணைக்களம்

யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

(1) வல்வெட்டித்துறை நகரசபைக் காரியாலயம் அமைத்தல் கட்டடம் ஒன்றிற்கான கேள்விகள் யாழ்ப்பாணம், நிர்மாணத்துறைத் திணைக்கள, பிரதம எந்திரி அலுவலகக் கேள்விச் சபையினரால் 1999 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி முற்பகல் 10 00 மணி வரை பிரதம எந்திரி அலுவலகம் நிர்மாணத் துறைத் திணைக்களம், யாழ்ப்பாணத்தில் ஏற்றுக் கொள்ளப்படும், பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக இக் காரியாலயத்தில் திறக்கப்படும்.

(2) நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இ'ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம் 7 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்த ஒப்பந்தக்காரர் மத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

(3) ஒப்பந்தப் பத்திரங்களை பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் (இ'ராட்) வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணம் நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் 1999 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி பிற்பகல் 4 45 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 500/- ரூபாவும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 22, 500/- ஐயும் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

(5) கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

(6) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம் நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில் பிற்பகல் 4, 45 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

எந்திரி ந. சுந்தரமூர்த்தி
பிரதம எந்திரி,
நிர்மாணத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7333)

# திருமுறைப் பாராயணம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28 அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் பன்னிரு திருமுறைப் பாராயணம், அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் சித்திரா பௌர்ணமி தினமான எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் யாழ்ப்பாணம் நக்கா வீதி, மருதடி எழும் பிள்ளையார் ஆலயத்தில மன்றத் தலைவர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்.

அன்றைய தினம் ஏழாலையூர் பண்டிதர் கலாநிதி மு. கந்தையாவின் ஆக்கமான 'சைவ வழிபாட்டில் திருமுறைப் பாராயணம்' எனும் பிரசுரமும் யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பண்டிதர் தி. பொன்னம்பலவாணரின் ஆக்கத்தில் உருவான 'திருமுறை ஓதல்' எனும் இவைச பிரசுரமும் சிறப்பு வெளியீடுகளாக வெளியிடப்படவுள்ளன. (க)


நேற்றைய ஓடியோ
CD வெளியீடு!
① தும்மிப்பாட்டு
② தேவி
③ நிலவே முகம் காட்டு
மூர்த்தி
வீடியோ சென்ரர்
மானிப்பாய்.
(65240)

லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
இன்று
விஜய் - ஸ்ரீவித்தியா
சரத்பாபு - கே. ஆர். விஜயா
நடித்த
நாளைய தீர்ப்பு
இன்று காட்சிகள்:
10-30, 2-30
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(64970)

ராஜா
யாழ்ப்பாணம்.
கடைசி வாரமாக
சூரியா - முரளி - ஜிவிதா
ரசிகா - மணிவண்ணன்
விவேக் - ராதிகா - நாஸர்
மற்றும் பலர் நடித்த
காதலே
நிம்மதி
இன்று காட்சிகள்
10-30, 2-00

ராஜா 'B' திரை
யாழ்ப்பாணம்
விஜயகாந்த் - மீனா
மற்றும் பலர் நடித்த
பெரியண்ணா
இன்று காட்சிகள்.
10-30, 2-30
(சி/7332)

நாகம்ஸ்
சுன்னாகம்.
ரஜனி - குஷ்பு - சரத்பாபு
ஜனகராஜ் நடித்த
அண்ணாமலை
காட்சிகள்: 11-00, 2-30
(65235)


# வலயக் கல்வித் திணைக்களம்

யாழ்ப்பாணம்

## ஏல விற்பனை

இந்தத் திணைக்களத்தால் பாவிக்கப்பட்ட சுமார் 2000 வெற்று உரப்பைகளும், 150 பாவித்த மரப் பெட்டிகளும் (கிரேட்ஸ்) 10 - 05 - 99 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10. 30 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன;

07 - 05 - 99 ஆம் திகதி காலை 9. 00 மணி தொடக்கம் பி. ப. 4 00 மணி வரை மேற்படி பொருள்களைப் பார்வையிடலாம்; ஏலம் நடைபெறும் அன்றைய தினமே கொள்வனவு செய்பவர் முழுப்பணத்தையும் செலுத்தி அன்றே பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும்.

கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7335)

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம்

(வண்ணார் பண்ணை)

வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார்கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவரும் லோகநாதன் (முன்னாள் மாநகர சபை உத்தியோகத்தர்), கனகேஸ்வரி, ஏகாம்பரநாதன் (யாழ். மாவட்ட சாரணர் உதவி ஆணையாளரும் யாழ். மாநகர நடுக்கட்டு உத்தியோகத்தரும்), பரின்பநாதன் (லண்டன்), ருக்மணிதேவி (பெரியபுலம் மகா வித்தியாலயம்), நாகேஸ்வரி (கனடா), குகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பராணி, தியாகராசா, தேவராணி, யோகமலர் (லண்டன்), பாலகிருஸ்ணன் (யாழ். மாவட்ட திட்டமிடல் செயலகம்), பூபாலசிங்கம் (கனடா), மல்லிகாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-04-99) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
சு. லோகநாதன் (J P.—மகன்)

41, கேசாவில் பிள்ளையார்கோயில் வீதி,
வண்ணார்பண்ணை.

(சி/7336)

## பஸ்ரியாம்பிள்ளை லீனப்பு பங்கராசா

கரம்பொனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஊர்காவற்றுறை ராஜா ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் தற்பொழுது கொழும்பில் வசித்தவருமாகிய பஸ்ரியாம்பிள்ளை லீனப்பு பங்கராசா காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [28-04-1999] புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு மாதம்பிட்டிய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அ ஜேராட்
[பெறாமகன்]

19/2, பாம்றோட்,
மட்டக்குளி.
தொலைபேசி: 523405

[65246]

## இலங்கைநாயகம் மகேசன்

ஆதி மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஓய்வுபெற்ற Supdt. Telecommunication traffic, Colombo ஆகிய இலங்கைநாயகம் மகேசன் சென்னையில் 27-4-99 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இலங்கைநாயகம் (O A கச்சேரி, யாழ்ப்பாணம்) - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பூதப்பிள்ளை உடையார் - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் நகுலேஸ்வரியின் (இந்தியா) அன்புக் கணவரும் சுகுமாரன் (Air Lanka), ஜெயக்குமாரன் (இந்தியா) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் இந்திரை, ஷாமினி ஆகியோரின் ஆசை மாமனாரும் மதனகோபால், மயூரா, மாதங்கி, நவநீதன் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் நடேசன் (தெல்லிப்பழை), நிமலாதேவி திருநாவுக்கரசு (கொழும்பு), Dr. விமலாதேவி, ஹரிஹரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தமையனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. அருணாசலம்
இ. நடேசன்

C-2, Suderson Gardens,
102. Vellachchery Road.
Guindy
Madars 32.

T. P. No: 9144 - 2300455
சென்னை.

(55230)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் வழிகாட்டல் பிரிவில் பதிய பட்டதாரிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று இதுவரை வேலை வாய்ப்பு எதுவுமின்றி உள்ள பட்டதாரிகளையும் கீழ் உழைப்பில் உள்ள பட்டதாரிகளையும் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் பிரிவில் பதிவு செய்துகொள்ளுமாறு துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பட்டதாரிகளுக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்படும் வேளையில் மேற்படி தொழில் வழிகாட்டல் பிரிவில் தம்மைப்பதிவு செய்து கொள்ளும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கும் எனவும் துணைவேந்தர் தெரிவித்தார்.

பட்டதாரிகள் தம்மைப் பதிவு செய்து கொள்ளும் போது தாம் யாழ். பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றமைக்கான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ - 7)

## மிருசுவில் பாடசாலையில் அலரி விதை உட்கொண்ட 4 சிறுவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, ஏப்ரல் 28

பாடசாலை இடைவேளையின்போது அலரிவிதை உட்கொண்ட நான்கு மாணவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆண்டு நான்கில் கல்வி பயிலும் நான்கு மாணவர்களே அலரிவிதை உட்கொண்டவர்களாவர்.

மிருசுவிலைச் சேர்ந்த செ. உதயசிலன் (வயது 10), அன்ரன் நியூட்டன் (வயது 10), யோ. கிரேசியன் (வயது 10), செல்வரத்தினம் பாலேந்திரகுமார் (வயது 10) ஆகிய மாணவர்களே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்கள் பாடசாலை இடைவேளையின்போது அவ்விடத்தில் நின்ற அலரி மரத்தில் ஏறி விதைகளைச் சாப்பிட்டதாகவும் பின்னர் வாந்தியெடுத்து மயங்கியதால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஐ-117]

## கணனி பயிற்சி நெறி

வலி. தென்மேற்கு, ஏப்ரல் 28

வட்டுக்கோட்டை, யாழ். பாணக்கல்லூரியில் விரைவில் கணனிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்லூரி முதல்வர் ஜி இராஜநாயகம் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து கடந்த வாரம் இரண்டு புதிய கணனிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. (இ-185)

## மின்சாரம் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

ஊரெழு கணேச வித்தியாசாலைக்கு மின்சார இணைப்பை வழங்குமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இலங்கை மின்சார சபையின் சுன்னாகப் பகுதிக்கான மின் அத்தியட்சகரைக் கேட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் மேற்படி பாடசாலையின் வளர்ச்சிக்காக அண்மையில் வழங்கப்பட்ட விஞ்ஞான உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு மின்சாரம் தேவையாக இருப்பதாகவும்—

மின்சார இணைப்பு வழங்கப்படும் சமயத்தில் விஞ்ஞான உபகரணங்களைப பயன்படுத்தி மாணவர்களின் கல்வி முன்னேற்றம் குறித்து ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## மே தினக் கூட்டம்

திருநெல்வேலி, ஏப்ரல் 28

புதிய ஜனநாயக கட்சியின் வட பிரதேசக் கிளை நடத்தும் மேதினக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கே. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த கூட்டத்தில் ''தாயகம்'' ஆசிரியர் க. தணிகாசலம் உட்பட மற்றும் பல தொழிற் சங்கங்களினதும் அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். (இ-135)

## சாரணர் பயிற்சிப் பாசறை

சண்டிலிப்பாய், ஏப்ரல் 28

காங்கேசன்துறை மாவட்ட கிளைச் சங்கம் புதிய சாரணர் செயற்திட்டத்துக்கிணங்க அணித்தலைவர்களுக்கான பயிற்சிப் பாசறை ஒன்றை கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடத்தியது.

48 அணித் தலைவர்கள் கலந்து கொண்ட இந்தப் பயிற்சிப் பாசறையை மாவட்ட சாரண ஆணையாளர் ந. சௌந்தரராசன் நெறிப்படுத்தினார். உதவி மாவட்ட ஆணையாளர் செ. [illegible] பயிற்சித் தலைவராக பணியாற்றினார்.

(இ-135)


உ

## வில்லூன்றி புனித தீர்த்தம் சித்திரா பூரணைப் பெருவிழா

30 – 04 – 1999 வெள்ளிக்கிழமை

**தீர்த்தோற்சவம்**

காலை 6-45 மணி வசந்த மண்டபப் பூசை
காலை 8-00 மணி தீர்த்த வாரி
காலை 9-00 மணி முதல் 10-00 மணி வரை தீர்த்தக் கட்டத்தில் அனுக்கிரகம்
காலை 10-00 மணி சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல்.

**பிதிர்க்கடன்**

காலை 8-15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்ம பரிபாலன சபை,
வில்லூன்றி தேவஸ்தானம்.
பரிபாலன சபை,
வில்லூன்றி புனித தீர்த்தம்.

வில்லூன்றி. (65226)



சங்குவேலி வடக்கு

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய திருப்பணி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

**பின்வரும் இலக்கங்கள் பரிசுகளைப் பெற்றுள்ளன.**

பரிசுக்குரியவர்கள் 03 – 05 – 99 திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு ஆலய மண்டபத்தில் தமது அதிர்ஷ்ட சீட்டுக்களை ஆதாரம் காட்டி பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

1 ஆம் பரிசு — 5222
2 ஆம் பரிசு — 1292
3 ஆம் பரிசு — 1558

ஆறுதல் பரிசுகள்:

| | | | |
|---|---|---|---|
| 9013 | 2987 | 1578 | 1605 |
| 5204 | 1107 | 0432 | 9329 |
| 1165 | 5050 | | |

- ஆலய பரிபாலன சபையினர்

( சி/7328 )



உ

கோப்பாய் அருள்மிகு

## வெள்ளெருவைப் பிள்ளையார் தேவஸ்தானம்

ஜீர்ணோத்தாரண - அஷ்டபந்தன

## மஹாகும்பாபிஷேகம்

29—04—99 **வியாழக்கிழமை**
காலை 5.30 மணி — பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம்

02 05—99 **ஞாயிற்றுக்கிழமை**
காலை 9 00 மணி — 3.00 மணி எண்ணெய்க்காப்பு

03—05—99 **திங்கட்கிழமை**
காலை 9 00 மணி – மஹாகும்பாபிஷேகம்
மாலை விசேட பூசையைத் தொடர்ந்து பூந்தண்டிகையில் சுவாமி வீதிவலம் வருதல்.

**சச்சிதானந்த சண்முகராஜேஸ்வரக் குருக்கள்**
ஆதீனகர்த்தா.

(சி/7329)



## முக்கிய அறிவித்தல்

என்னால் அளவை செய்யப்பட்டு வரையப்பட்ட காணிகளின் வரைபடங்கள் பல இன்னும் என்வசம் உள்ளன. எனது உடல் நிலை குன்றிவருவதால் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் காணிகளின் வரைபடங்களை மிகுதிப்பணத்தைத்தந்து விரைவில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தி. அருமைநாயகம்
உத்தரவு பெற்ற நில அளவையாளர்.

எனது தற்போதைய விலாசம்
23, சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
(மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகில்)

(65233)


## யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ து) பதவி வெற்றிடம்

1. பதவி: கணக்குப்பதிவாளர் ( நிரந்தரம் )
2. பதவி இல: 165/88 - 12 - 301/10
3. சம்பள அளவுத்திட்டம்: 31/97
   2850 – 4450
   70 x 10 - 90 x 10
4. தகைமைகள்:

அ: கூட்டுறவு ஊழியர் 13 ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப்பதிவியல் அல்லது கணக்கு அலுவல்கள் பற்றிய பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 14 ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்கு அலுவல்கள் பற்றிய பதவியொன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ: ஐக்கிய இராஜ்ய கணக்குப் பதிவியலாளர் நிறுவன மத்திய பரீட்சையில் சித்தி.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் உயர்தரம்/க. பொ. த. (உயர்தரம் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தி.

5. வயதெல்லை:

14 – 05 - 99 ஆம் திகதி 23 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6. ஏனைய விவரங்கள்:

1. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவங்களையும் ஏனைய விவரங்களையும் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 10 காசுக்கட்டளையும் தங்களது பெயர், முகவரி எழுதப்பட்ட 9'' x 4'' அளவிலான முத்திரைக் கடித உறை ஒன்றையும் பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலமோ அல்லது நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம்.
2. விண்ணப்ப முடிவு திகதி: 14 - 05 – 1999.
3. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத் தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுபபுதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

பொது முகாமையாளர்

(சி/7331)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

செல்லத்துரை சந்திர மோகன் ஆகிய எனது தேசிய (612672148V) விசேட, நவீல்ட் பாடசாலை அடையாள அட்டைகள், கச்சேரிக்கும், புங்கன்குளத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 102, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (65203)

372, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லத்துரை சசிக்குமார் என்பவரது விஷேட அடையாள அட்டை [இல. 0901031751] கஸ்தூரியார் வீதிக்கும், நாவலர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுமங்கலி ஜ~வலஸ் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும் சன்மானம் வழங்கப்படும்.
(65201)

சச்சிதானந்தம் கமலாதேவி என்பவருடைய விசேட அடையாள அட்டை [இல. 090402444] சுதுமலைக்கும், தாவடிக்கும் இடையில் 23 - 4 – 99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுழிபுரம் கிழக்கிலுள்ள ஜெயந்திமில்லில் ஒப்படைக்கவும். (65199)

### ஜோதிடம்

தடைபெறும் திருமணம் விரைவில் நடைபெற, வெளிநாடு செல்லமுடியாது இடையில் பயணம் தடைப்பட்டவர் உரிய இடம்சேர ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும், பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம், பொய்யாமொழி ஜோதிடம், புதன்கிழமையில் 111/3, கோயில் வீதி நல்லூரிலும், ஞாயிற்றுக்கிழமைகளில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம்.(65191)

## சமய சொற்பொழிவு

உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் இன்று புதன் நடைபெறும் கடவுள் சுவாமிகளின் 94 வது ஜயந்திதின நிகழ்வில் சுவாமிகளின் 'அற்புதங்கள் அருள்வாக்குகள்' பற்றிய சொற்பொழிவை தி. சத்தியதாசன் வழங்குவார். ~இ~

### வீடு விற்பனைக்கு

இல. 09, 3 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீடும், வளவும் ($1\frac{1}{2}$ பரப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி. ராஜகுலேந்திரன், 09, 3 ஆம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்.

(65184)

### தவறிவிட்டது

மொந்திபுலம் காரைநகரைச் சேர்ந்த திருமதி யோகராசா புவனேஸ்வரி என்பவரது விசேட அ. அட்டை 21 - 4 - 99 இல் யாழ். வட்டுக்கோட்டை ஊடாகச் செல்லும் 782 மினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லீலா ஸ்ரோர்ஸ், மூளாய் றோட், மாவடி, வட்டுக்கோட்டை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (65202)

## வெளிவந்துவிட்டது!

வெளிவாரி விளைவுகள்

# பொருளியல் நூல்

ஆசிரியர்:
வே. கருணாகரன்

(65207)

நெடுந்தீவு

## பல நோ. கூ. சங்கம்
## லொறிச்சாரதி / கிளீனர்
## பதவிக்கான வெற்றிடம்

எமது சங்கத்தில் லொறிச் சாரதி / கிளீனர் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விணண்ப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் 12-05-1999 ஆம் திகதிக்கு முன்கிடைக்க கூடியதாக பொது முகாமையாளர், நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம், நெடுந்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். லொறி யாழ்ப்பாண பெரும் பரப்பிலேயே சேவையில் ஈடுபடுவதால் யாழ்ப்பாணத்திலும் அதற்கு அண்மையிலும் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கல்வித் தகைமைகள் அனுபவச் சான்றிதழ்கள், வாகன உத்தரவுப் பத்திரம் ஆகியவற்றின் போட்டோ பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**சாரதி**

**தகைமைகள்:**

(I) ஆகக்குறைந்தது 8ஆம் வகுப்பு சித்தி.
சாரதி அனுமதிப்பத்திரம்: ஆகக்குறைந்தது ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட சாரதி அனுபவம்.
(II) வயது: 1-6-1999 இல் 20 — 45 வயதுக்குள்
(III) சம்பளம்: சுற்று நிருபம் 31/97 அமைவாக
2800 — 4250
65x10 — 80x10

**லொறி கிளீனர்**

(I) வயது: 20 — 45
(II) கல்வித்தகைமைகள்: 10ஆம் வகுப்புக்கு மேல்
(III) சம்பளம்: சுற்று நிருபத்துக்கு அமைவாக வழங்கப்படும்.

வ. கனகசபை
பொது முகாமையாளர்

(சி/7321)

## கண்ணீர் அஞ்சலி

புலோலி மேற்கைச் சேர்ந்த
எமது பாடசாலை ஆசிரியர்
திரு. க. முருகானந்ததாஸ்
அவர்களின் பாசமிகு தந்தையார்


### மு. கதிர்காமு

அவர்கள் 24—04—99 சனிக்கிழமை சிவபதம் அடைந்ததையிட்டு, துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமதுஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்.
தேவரையாளி இந்துக்கல்லூரி,
வதிரி, கரவெட்டி.

(65219)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்



செல்வன்

### செல்லத்துரை தயாளரூபன்

(யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

அன்னைமடியில் 01 - 04 - 81
அநியாயஅழிப்பில் 30 - 01 - 99

நாளை (29 - 04 - 99) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேஷ்டிக் கிரியையில் கலந்துகொள்ளுமாறு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.

தேவாலய வீதி,
ஆதியாமலை,
உடுப்பிட்டி.

(65216)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் கட ிறொழிலில் ஈடுபடக் கட்டுப்பாடு

செம்பியன்பற்று, ஏப்ரல்28 வடமராட்சிகிழக்கு மணல் காடு, குடத்தனை நாகர் கோயில், குடாரப்பு மாமுனைப் பகுதி மீனவர்கள் கடறறொழிலில் ஈடுபட படையினர் கட்டுப்பாடு விதித் துள்ளனர்.

கடந்த ஞாயிறு முதல் இந்தக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இது வரை இப்பகுதி மீனவர்கள் அதிகாலை 2.00 மணியில் இருந்து மாலை 6.00 மணிவரை கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தனர். தற்போது அதிகாலை 5.00 மணியில் இருந்துமாலை 5.00மணி வரையும் கடற்றொழிலில் ஈடுபடுமாறு படையினர் பணித்துள்ளனர்.

இந்த நேரக் கட்டுப்பாடு காரணமாக மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள் ளனர் என்று தெருவிக்கப் படுகிறது. குறித்த நேரத்தில் மீன் பிடிக்கக்கூடிய கால நிலை இல்லை எனவும் காலை 5.00 மணிக்குப் பின்னர் மீன்பிடிக்கச் சென்றால் சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்பு இப்பகுதியில் இல்லை எனவும் மாமுனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவித்தார். (இ-36)

## முறிந்து வீழ்ந்த பனையில் சிக்கிக் குடும்பஸ்தர் பலி!

நெல்லியடி, ஏப்ரல் 28 வீதியில் நடந்து சென்றவர் திடீரென முறிந்து வீழ்ந்த பனைமரம் ஒன்றினுள் சிக்கிப் பரிதாபமாக மரணமானார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் புலோலி தெற்கு தேவரன்என்ற இடத்தில் இடப்பெற்றது

தனது வீட்டில் நின்ற மாட்டை, அருகிலுள்ளகாணியொன்றில் மேய்ச்சலுக்குக் கட்டிவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த இதே இடத்தைச் சேர்ந்த கிட்டிணபிள்ளை-தேவராசா [வயது 54] என்பவர் மீதே பனைமரம்முறிந்துவீழ்ந்தது. கழுத்திலும் இடது காலிலும் படுகாயமடைந்த அவர் மந்திகை மருத்துவ மனைக்குக் கொண்டு வரப்பட்டபோது அங்கு மரணமானார்.

இது சம்பந்தமான மரண விசாரணை, மந்திகை மருத்துவ மனையில் நடைபெற்றது. பருத்தித்துறை மாவட்டப் பதில் நீதிவான் — திருமதி விஜயராணி — உருத்திரேஸ்வரன், விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்துச் சடலத்தை உறவினரிடம் கையளித்தார். (ஐ-109)

## மந்திகையில் இளைஞர் கைது

புலோலி தெற்கு சிங்கை நகரைச் சேர்ந்த இராமச்சந்திரா கங்காதரன் (வயது 24) என்பவர் ஞாயிற்றுக்கிழமை மாலை மந்திகையில் வைத்து கைது செய்யப்பட்டதாக அவரது தந்தையார் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ-173)

## கிருமிநாசனி விசிறுவதற்கு உயர்வலு தெளிகருவி
### விவசாயிகளுக்கு கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28 தென்னை மற்றும்பயன் தரு மரங்களைப் பூச்சி புழுக்கள் மற்றும் நோய்த் தாக்கங்களிலிருந்து கட்டுப்படுத்தும் நோக்குடன் கிருமிநாசனி தெளிபபதற்குப் பட்டினிக்கு எதிரான இயக்கத்தினால் உயர்வலு தெளிகருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள இந்த உயர்வலு தெளிகருவிகள் மூலம் உயரமான மரங்களுக்கு மருந்துகள் விசிற முடியும் என்று தெரிவிக்கப் படுகின்றது.

இந்தத் தெளிகருவிகள் விவசாயச் சம்மேளனங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் ஊடாக விவசாயிகளின் பாவனைக்கு வழங்கப் படுவதுடன் கிருமிநாசனியும் பட்டினிக்கு எதிரான இயக்கத்தினால் வழங்கப்படும்.

இந்தத் தெளி கருவிகளைப் பயன்படுத்த விரும்பும் விவசாயிகள், விவசாயச் சம்மேளனங்கள் மூலம் பட்டினிச்கு எதிரான இயக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பட்டினிக்கு எதிரான இயக்கத்தினால் இந்தத் தெளி கருவிகள் மூலம் உடுவில், கோப்பாய், தெல்லிப்பழைப் பிரதேசச் செயலர் பிரிவுகளில் 4 ஆயிரத்து 197 மா மரங்களுக்குப் பங்கசு நாசனியும், பூச்சி நாசனியும் அண்மையில் விசிறப்பட்டது குறிப்பிடத் தக்கது. (இ-5-க)

## ஜெயந்தி தினம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28 செல்வச்சந்நிதி கடவுள் சுவாமிகளின்(முருகுப்பிள்ளை சுவாமிகள்) 94 ஆவது ஜெயந்தி தினம் இன்று புதன் கிழமை உடுவில் கிழக்கு 'கடவுள் சந்நிதி' யில் காலை 8.00 மணிமுதல் இடம்பெறும் விசேட பூசை, ஆராதனை, பஜனை மகேஸ்வர பூசை, சொற்பொழிவு என்பனவும் இடம்பெறும். (ஏ-6-15)

# மந்திகை ஆஸ்பத்திரி கழிவகற்றல் முறையால் சுகாதாரக் கேடுகள்
### திணைக்களம் மாற்று ஏற்பாடு செய்யாதா?

பருத்தித்துறை, ஏப்ரல் 28 மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையின் மலசல கூடக் சழிவுகள் வெளியே விடப்படுவதனால் சூழல் மாசடைவதுடன் பொது மக்களுக்கும் பலத்த சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன.

இவ்வைத்திய சாலையில் மலசலகூட சழிவுகளை அகற்றுவதற்கு பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட குழாய் மூலம் சழிவகற்றும் திடடம் [Sewerege) இதுவரை பூர்த்தியடையாமையினால் இக்சழிவுகள் வெளியே கொட்டப்பட்டு வருகின்றன.

இக்சழிவு அகற்றும் திட்டத்தின் கீழ் சழிவுகளை ஒரே இடத்தில் சேமிக்கும் திட்டம் பூர்த்தியடைந்த போதிலும் அவற்றைப் பாதுகாப்பான முறையில் அப்புறப் படுத்தவோ அன்றில் இரசாயன மாற்றங்களுக்குட்படுத்தி அப்புறப்படுத்தவோ இது வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் இத்திட்டம் முற்றுப்பெறாமல உள்ளது.

சழிவுகள் சேமிக்கும் பாரிய குழியில் கழிவுகள் நிறைந்ததும் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் வைத்தியசாலை வளவுக்குள்ளேயே வெளியேற்றப்படுகிறது.

இந்த நடவடிக்கையால் சூழல், சுற்றுப்புறங்கள் மாசடைந்து, பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதுடன் தொற்று நோய்களும் பரவக்கூடிய பாய நிலை தோன்றியுள்ளது.

பிரான்ஸ் வைத்தியக் குழுவினர் (MSF) முன்னர் இங்கு கடமையாற்றியபோது தேங்கும் சழிவுகளை பாரிய கொள்கலன்களில் உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்று ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அப்பால் வெட்டிப் புதைத்து வந்தார்கள்.

தற்போது பிரான்ஸ் வைத்தியக் குழுவின் சேவை இல்லாததால் இவ்வேலைத் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாத வைத்தியசாலை நிர்வாகம் வைத்தியசாலை வளவிலேயே அப்புறப்படுத்தி வருகிறது.

இது குறித்து பிராந்திய சுகாதாரத் திணைக்களம் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாதமையிட்டு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ]அ-118-173)

### காணாமற்போனோர் விடயம்
## சி. ஐ. டி. விசாரணை இன்றுடன் முடிவடையும்

காணாமல் போனோர் தொடர்பாக பொலீஸ் புலனாய்வுப் பிரிவினரால் யாழ். பொலீஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் இன்று புதன்கிழமையுடன் முடிவடையவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் காணாமல் போன சுமார் 215 பேர் தொடர்பாக அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களால் சாட்சியங்கள் அளிக்கப்பட்டுள்ளதாகவும் —

திங்கட்கிழமை மட்டுப் காணாமல் போன சுமார் 55 பேர் தொடர்பாக அவர்களின் உறவினர்களால் சாட்சியங்கள் அளிக்கப்பட்டதாகவும் —

விசாரணைக்கு சமுகம் அளிப்போர் காணாமல் போனோர் தொடர்பாக தம்மிடம் உள்ள சான்றுகளைக் கொண்டுவரவேண்டும் எனவும் — புலனாய்வுப் பொலிஸ் அதிகாரிகள் சார்பில் கோரப்பட்டுள்ளது. (ஐ-7)

# செய்திக் கொத்து

## இலவச மரமுந்திரிகை

திருநெல்வேலி, ஏப்ரல் 28 அரியாலை விவசாய சம்மேளனத்தில் மர முந்திரிகைக் கன்றுகளுக்கு விண்ணப்பித்திருந்த இருநூறு பேருக்குக் கடந்த வாரம் அரியாலை ஜெயபாரதி சனசமூக நிலையத்தில் வைத்து நல்லூர் பிரதேச சபை உபதலைவர் த. இராசகுமாரினால் இலவசமாக மரமுந்திரிகைக் கன்றுகள் விநியோகிக்கப் பட்டன. (க—135)

## 'கெயர்' உதவி

வடமராட்சி கிழக்கு ஏப்ரல் 28 வடமராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது இடம் பெயர்ந்து மீளக்குடியேறாத மீனவர்களுக்கு கெயர் நிறுவனம் கடற்றொழில் உபகரண்ங்களை வழங்கி உள்ளது. (க—36)

## நியமனம்

வேலணை, ஏப்ரல் 28 காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்கு தென் பகுதியைச் சேர்ந்த திருமதி பெடகொட என்ற சிங்கள வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். (க-167)

## தாமரைக் கொடியில் சிக்கி மரணம்

வலி கிழக்கு, ஏப்ரல் 28. குளத்தில் குளிப்பதற்குச் சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தை தாமரைக் கொடியில் சிக்கி மரணமானார்.

கடந்த 22 ஆம் திகதி நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் குளத்தில் குளித்த க. பரமநாதன்(45 வயது) என்பவரே மரணமடைந்தவர் ஆவார். (க-86)

## அடிக்கல் நடப்பட்டது

கொழும்புத்துறை, ஏப்ரல் 28 கொழும்புத்துறை,பாண்டியன்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம ஞான வைரவர் கோயிலுக்கு புதிய மணிக் கூட்டுக்கோபுரம் அமைக்கும் பணி அண்மையில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு பூசை, ஆராதனையைத் தொடர்ந்து இடம்பெற்றது (இ-30)

## அபிவிருத்தி வேலைகள்

தென்மராட்சி, ஏப்ரல் 28 பளைப் பிரதேச சபையினால் இந்த வருடத்துக்குரிய அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வட மாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டில் முகமாலை-கிளாலி வீதி, பளை புகையிரத நிலைய வீதி ஆகியவை திருத்தப்படவுள்ளன.

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் வேம்பொடுகேணி நவுணவெளி அம்பாள் ஆலய வீதி திருத்தப்படும்.

பளை அரசர்கேணி, சோரன்பற்று ஆகிய இடங்களில் பொதுக் கிணறுகள் அமைக்கப்படும்.

பொதுச்சந்தையில்உள்ள பளை பிரதேச சபைக்குச் சொந்தமானகடைஅறைத் தொகுதிகள்திருத்தப்படும்.

பிரதேச சபைச் செயலாளர் கு. ந. பாலச்சந்திரன் இதனைத் தெரிவித்தார். (இ-117)

## படையினர் தேடுதல்

வடமராட்சிகிழக்கு, ஏப். 28 குடத்தனை, மணற்காடு பகுதிகள் திங்களன்று படையினரால் சுற்றி வளைக்கப் பட்டு தேடுதல் நடத்தப் பட்டது.

அதிகாலை 7 மணியில் இருந்து 8.30 மணிவரை வல்லிபுரம் சோதனைச் சாவடி ஊடாக வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை. பின்னர் நிலைமைவழமைக்குத் திரும்பியது. (இ-36)

## மணிக்கோபுரம்

கைதடி, ஏப்ரல் 28 கைதடி சுயிற்றசிட்டி, கந்தசுவாமி ஆலயத்துக்குப் புதிய மணிக்கோபுரம் அமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

புதிய கோபுரம் அடியார்கள் மற்றும் பலரது உதவியுடன் வெள்ளைப் பொளிகற்களால் உருவாக்கப் பட்டு வருகிறது. (க-74)

## தூக்க நோய்

அளவெட்டி, ஏப்ரல் 28 தற்போது நிலவி வரும் கடும் வெப்பம் காரணமாக கோழிகளுக்கு தூக்க நோய் ஏற்பட்டுள்ளது.

அளவெட்டி, சண்டிலிப்பாய், பன்னாலை ஆகிய பகுதிகளிலே கோழிகளுக்கான தூக்கநோய் அதிகரித்துக் காணப்படுகின்றது. (க-13)

## நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஏப்ரல் 28 சீடா நிறுவன உதவியுடன் ஆண்டு ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி வளத்தினை அதிகரிக்கும் பொருட்டு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் சிலவற்றுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28 நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை அதிபராகக் கடமையாற்றிய வ. இராதாகிருஷ்ணன் தீவக கல்வி வலயத்துக்கு உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். (க)

## கிருமிநாசனி தெளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28 தொல்புரம் பகுதியில் உள்ள பழமரக் கன்றுகளுக்கு பட்டினிக்கு எதிரான இயக்கத்தினால் இன்று புதன்கிழமை கிருமி நாசனி மருந்து தெளிக்கப் படவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற தொல்புரம் விவசாய சம்மேளனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## பற்றைகளை அகற்ற பணிப்பு

அளவெட்டி. ஏப்ரல் 28 அளவெட்டியில் மக்கள் மீளக்குடியேறிய பகுதிகளில் ஆள்களில்லாத வீட்டு வளவுகளில் உள்ள பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்யுமாறு இப் பகுதி இராணுவத்தினர் கிராம அலுவலர்கள் ஊடாக மக்களுக்குப்பணிப்புரை விடுத்துள்ளனர்.

பல தரப்பட்ட களவுகள் மற்றும் சிரமங்களைத் தவிர்ப்பதற்கும் இந்த செயல் உதவும் என வலியுறுத்தியுள்ளனர். (க-13)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣



செல்வன்

## சோமசுந்தரம் கோகுல்

28 - 04 - 1999

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த
சோமசுந்தரம் இராகினி தம்பதிகளின்
ஏக புதல்வன் கோகுல்

தனது முதலாவது பிறந்த நாளை இன்று தனது இல்லத்தில் மிக அமைதியாகக் கொண்டாடுகிறார். இவரை உறவினர்கள், கச்சாய் கண்ணகை அம்மன் அருள்பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

நாதன்ஸ் கூல்பார்
சாவகச்சேரி

(65142)

## பனையால் விழுந்து மரணம்

தென்மராட்சி, ஏப்ரல் 28

கள் எடுப்பதற்காக பனை மரத்தில் ஏறியவர் மரத்திலிருந்து தவறி வீழ்ந்து மரணமான சம்பவம் கடந்த வியாழக்கிழமை மிருசுவில் தவசிகுளத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த க. செல்லத்துரை (வயது 67) என்பவரே மரணமானவராவார்.

படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ் போதனாவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் அவர் மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-117-31)

## விற்பனைக்கு

புறொயிலர் ஸ்ராட்டர், புறொயிலர் பினிசர் கோழித்தீவனம் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் கீழ்க்காணும் விலாசத்திலும், சங்கத்தின் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**பொது முகாமையாளர்**
**யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
கலாசாலை வீதி.
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி/7313)

## நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம்
## கூறு விலை கோரல்

கீழ்க்காண் பொருள்கள் கேள்வி மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

I. மிற்சுபிசி " சக்தி " இரண்டு சக்கர உழவு இயந்திரம் கலப்பையுடன் ஓடக்கூடிய நிலையில்.
II. அசோக் லேலன் படகு எஞ்ஜின் கியர் பொக்ஸ் உடன் 90 கோஸ் பவர் RPM - 1500 - HD - 90 ஓடக்கூடிய நிலையில்.
III. வெற்றுச் சாக்குகள் - 7000
IV. வெற்றுப் பொலுத்தீன் உறைகள் - 30000
V. வெற்று எண்ணெய் பரல்கள் - 100
இவற்றை நெடுந்தீவு சங்கத்தில் பார்வையிடலாம்.
VI. பாவித்த லொறி ரயர்கள் - 900X25
" " ரியூப்புக்கள் "
VII. பழைய பற்றறி

இவற்றை இல. 15, கயிலாய பிள்ளையார் கோயில் வீதி, நல்லூர் இல்லத்தில் பார்வையிடலாம்.

**கேள்வி நிறைவு நாள்: 12.05.99**

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்,
நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம்,
நெடுந்தீவு.

வ. கனகசபை
பொது முகாமையாளர்

(C/7322)

## சுன்னாகம்
## பல நோ. கூ. சங்கம் [வ. து] சுன்னாகம்
## அறிவித்தல்

பின்வரும் பதவிக்கு சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் சங்க வேலை நாள்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கிளை முகாமையாளர் பதவி**
1) குறி இல. 208:16
2) குறி இல. 208:15

**விண்ணப்ப முடிவு திகதி.- 10 - 05 - 99**

பொது - முகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
24 - 04 - 99

[சி/7323]

## தவறிவிட்டது

திறப்புக்கோர்வையொன்று நாயன்மார்கட்டு வைத்திய நிலையத்துக்கும் முத்திரைச் சந்தைக்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் நாயன்மார்கட்டு முறிவு—நெரிவு வைத்திய நிலையத்தில் ஒப்படைக்கவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(65214)

## ரஷ்யாவில் மருத்துவக்கல்வி

**THE KURSK STATE MEDICAL UNIVERSITY RUSSIA**

★ செப்ரெம்பர் 1999 இல் ஆரம்பமாகும் கல்வியாண்டுக்கு குர்க்ஸ் அரச மருத்துவ பல்கலைக்கழகத்தில் உடனடியாக அனுமதி பெற்றுத் தரப்படும்.
★ க. பொ. த. (உ. த) பரீட்சையில் 4 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
★ க. பொ. த. (சா. த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
★ முற்றிலும் ஆங்கிலத்தில் போதனைகள் நடைபெறும்.

முன்னேற்பாட்டுக்கும் மேலதிக தகவல்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

மு. பாக்கியநாதன்
(AUTHORIZED RECRUITING AGENT FOR THE KURSK MEDICAL UNIVERSITY, RUSSIA)
2-64, மஜெஸ்ரிக் சிற்றி, கொழும்பு - 04.
தொலைபேசி - 716068, 592097, 077328642

யாழ். மாவட்டத்தில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


செ. சபாநாயகம்
'ஆனந்த பவனம்', உடுப்பிட்டி வீதி,
மாலி சந்தி, கரவெட்டி

(65198)

## நீங்கா நினைவலைகள்

**2 ஆம் ஆண்டு** **3 ஆம் ஆண்டு**





திருமதி
**எமிலியானுஸ்பிள்ளை ஞானம்மா**

மலர்வு 05-09-28
உதிர்வு 28-04-97

அமரர்
**எமிலியானுஸ்பிள்ளை பிரான்சிஸ் ஜெயபாலன்** B. Sc
(முன்னாள் ஆசிரியர், யா/ புனித பத்திரிசியார் கல்லூரி)

மலர்வு 31-08-56
உதிர்வு 23-04-96


சீவியத்தில் எம்மை நேசித்தவர்களே!
மரணத்திலும் எம்மை மறவாதீர்கள்
அன்பாய், ஆதரவாய், பண்பாய், பாசமாய் எம்மைக் காத்து
வளர்த்து நின்ற எம் அருமைத் தெய்வங்களே!
இனி எப்பிறப்பில் உங்களைக் காண்போம்
என்று ஏங்கித் தவிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்திபெற என்றென்றும் பிரார்த்திக்கும்

- குடும்பத்தினர்.

ஏழாலை மத்தி,
ஏழாலை.

(65196)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 19 — 11 — 1961
விண்ணில் 28 — 01 — 1999

அமரர்
## இறப்பியல் சுகததாஸ்
(மைனா)

மரணம் வாழ்வின் முடிவல்ல
நித்திய வாழ்வின் ஆரம்பம்

இவரது நினைவில் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
தந்தை, சகோதரர், உறவினர்.

நெடுங்குளம் றோட்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(65026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பீரிஸும் பொதியும்

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமெனில் இப்போதுள்ள ஒற்றையாட்சி முறையை மாற்றி சமஷ்டி ஆட்சி முறை கொண்டு வரப்பட வேண்டும்.

இவ்வாறு அரசமைப்பு, நீதி, தேசிய நல்லிணக்க அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் சுவிடனில் நடைபெற்ற இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் தீர்வுப் பொதி தமிழ் மக்கள் தமது அலுவல்களை தமக்குத் தேவையான முறையில் செய்து கொள்ள அதிகாரம் வுழங்குகிறது எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இல்லாததாலேயே அரசாங்கத்தினால் தீர்வுப் பொதியை நிறைவேற்ற முடியவில்லை என்றும் அரசியல் அறிஞர்கள், கல்வியாளர்கள் கலந்துகொண்ட கருத்தரங்கில் அமைச்சர் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கத்தின் தீர்வுப் பொதியின் பிரதான சிற்பி பேராசிரியர் பீரிஸ் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. இந்தத் தீர்வுப் பொதி சமஷ்டி ஆட்சி முறையின் அரைப் பதத்துக்கும் வரவில்லை என்பது அமைச்சருக்குத் தெரியும். சமஷ்டி ஆட்சி முறை கொண்டு வரப்பட வேண்டும் என்று அமைச்சர் கூறியிருப்பதால் அரசின் தீர்வுப் பொதி முழுமையான சமஷ்டி வடிவம் அல்ல என்பதனை அவர் ஒப்புக் கொள்வதாக உள்ளது.

இதிலிருந்து தமிழ் மக்களும், தமிழ்க் கட்சிகளும் புரிந்து கொள்ள வேண்டியது ஒன்று உண்டு. அதாவது, அரசாங்கத்தின் தீர்வுப்பொதி ஓர் அரைகுறைத் தீர்வாக, தற்காலிகத் தீர்வாக அமையுமே அன்றி முழுத் தீர்வாக மாட்டாது என்பதனை அமைச்சர் பீரிஸே மறைமுகமாக ஒப்புக் கொண்டிருக்கிறார் என்பதே அதுவாகும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் அரசாங்கம் செய்யவேண்டியது என்ன? இலங்கை ஒரே நாடாக இருக்க வேண்டுமாயின் ஆகக் குறைந்தது தமிழர்களுக்குத் தன்னாட்சி உரிமையுள்ள தனி அரசை அடக்கும் முழு அளவிலான சமஷ்டி ஆட்சிமுறை இன்றியமையாதது என்பதனை சிங்கள மக்களுக்கு விளங்க வைக்க வேண்டும். அதற்கான பிரசாரம் முடுக்கி விடப்படுவது அவசியம்.

ஆனால் அரசாங்கம் என்ன செய்கிறது? போரைத் தொடர்கிறது அதன் மூலம் கிடைக்கும் சில சிறு இராணுவ வெற்றிகளை மூலதனமாக்கி, சிங்கள மக்களின் வாக்குகளை — ஆதரவை — பெற முனைகிறது. இத்தகைய செயற்பாடுகள் தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்கக்கூடாது என்ற மனப்போக்கையே அம் மக்களிடையே வளர்க்கும்.

அதே போன்று, போரை நிறுத்தாமல், பேச்சு நடத்தாமல் தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய ஒரு தீர்வை வகுக்கவும் முடியாது.

இவற்றை அரசு உணர்வது எப்போது?

### இக்கட்டான நிலையில் வாழ்ந்த போதிலும்

# தந்தைசெல்வாவின் கொள்கையை முன்னெடுத்து தமிழ் மக்களுக்கு தனி அரசு அமைக்கவேண்டும்!

### சிலைதிறப்பு விழாவில் மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

ஈழத் தமிழ் மக்கள் இப்போது இக்கட்டான நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அதன் மத்தியிலும் தந்தை செல்வாவின் கொள்கையை முன்னெடுத்து தமிழருக்கு அரசு ஒன்றை அமைக்க வேண்டும். எமது கட்சி அதற்காகவே தொடர்ந்து போராடிவருகிறது.

இவ்வாறு தந்தை செல்வாவின் உருவச் சிலைத் திறப்பு விழாவில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தந்தை செல்வா நினைவிடத்தில் அன்னாரது உருவச் சிலை கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி க. குணராசா தலைமையில் விழா நடைபெற்றது.

மாவை சேனாதிராஜா அங்கு பேசும்போது மேலும் கூறியதாவது:

தமிழ் மக்கள் தமக்கென ஓர் ஆட்சியை ஏற்படுத்தி சுதந்திரமாக இந்த நாட்டில் வாழவேண்டும் என்பதற்காக அன்றைய அரசுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்த போதும் சிங்கள இனவாதிகள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மதிக்கத் தவறினர். இந்த நாட்டின் இன்றைய நிலைக்கு இதுவே காரணமாகும்.

சமஷ்டிக் கோரிக்கைக்கு பேரினவாதிகள் எதிர்ப்புக் காட்டியதைத் தொடர்ந்து தமிழர்களுக்குத் தனியரசு நிறுவுவதே ஒரேயொரு மாற்று வழி என்பதை தந்தை செல்வா எடுத்துக் கூறி அதற்கு மக்களின் ஒருமித்த ஆதரவையும் பெற்றார்.

அவரது கொள்கைகளை முன்னெடுத்துச் சென்று தமிழர்களுக்கென அரசொன்றை அமைப்பதே எமது இலட்சியமாக உள்ளது.

தந்தை செல்வாவின் உருவச் சிலையை தலைவர் சிவசிதம்பரம் அவர்களே திறந்து வைக்க வேண்டும் என நாம் விரும்பினோம். எனினும் சுகவீனம் காரணமாக அவர் இங்கு வர முடியாததால் என்னைத் திறந்து வைக்குமாறு கேட்டிருந்தார், நான் இயக்கத்தின் ஒரு தொண்டனாகவேயுள்ளேன். எனக்கு தந்தை செல்வாவின் சிலையைத் திறந்து வைக்கத் தகுதியில்லாத போதும் எனது கட்சியின் கட்டளைக்கமைய தந்தையின் சிலையைத் திறந்து வைக்கின்றேன் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் எஸ். சத்தியசீலன் பேசும்போது கூறியதாவது:-

அரசியல் பொருளாதார நிலைகளில் தமிழினம் உன்னத நிலை எய்த வேண்டும் என்று விரும்பியவர் தந்தை செல்வா.

அவர் தானாக விரும்பி அரசியலுக்கு வந்தவரல்லர் காலச் சூழலால் அரசியலுக்கு இழுத்து வரப்பட்டவர்.

தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக்கப்பட்ட போது வலுவான சக்தியாக இருந்து தமிழர்களின் சுதந்திரத்திற்காக சாத்வீகப் போராட்டங்களை அவர் மேற்கொண்டார்.

சேர் பொன். இராமநாதன், ஜீ. ஜீ. பொன்னம்பலம் போன்ற அரசியல்வாதிகள் தங்கள் கடைசிக் காலத்தில் தான் சிங்கள அரசியல்வாதிகளை விளங்கிக் கொண்டனர். தந்தை செல்வாவோ ஆரம்பத்திலேயே அவர்களை இனம் கண்டு கொண்டார்- என்றார்.

#### வாழ்த்துச் செய்தி

யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் கே. எம். எஸ். ஹமீட் சிலை திறப்பு விழாவை முன்னிட்டு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் கடந்த காலத்தில் புத்தளம், காலி ஆகிய பகுதிகளில் எமது முஸ்லிம் மக்கள் அரச காவலர்களால் துன்புறுத்தப்பட்ட வேளையில் எமது சமூகத்திற்காகக் குரல் கொடுக்க வேண்டியவர்கள் மௌனமாக இருந்தபோது நாடாளுமன்றத்தில் எமக்காகக் குரல் கொடுத்தவர் தந்தை செல்வாவும் அமரர் அமிர்தலிங்கமுமே.

தந்தை செல்வா தமது இறுதி நேரத்தில் ''தமிழ் மக்களை இறைவன்தான் காக்க வேண்டும்'' என்று கூறிய தீர்க்கதரிசனமான வார்த்தைகள் எந்த அளவு உணர்வு பூர்வமானவை என்பதை தற்போதய நிகழ்வுகளில் இருந்து உணர முடிகிறது.

எமது நாட்டில் சாந்தியும் சமாதானமும் மலர்வதுடன் முஸ்லிம் மக்களும் சுதந்திரத்துடனும் தன்மானத்துடனும் வாழும் போதுதான் அவரது ஆத்மா சாந்தியடையும்.

தமிழ் மக்கள் மனதில் தந்தை செல்வா இடம்பெற அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் இந்த நேரத்தில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் சிதறிவாழும் யாழ். முஸ்லிம் மக்கள் மீண்டும் யாழ். திரும்பும் போதுதான் நானும் யாழ்ப்பாணம் திரும்புவேன் என்று உறுதியுடன் இருக்கும் சிவசிதம்பரம் அவர்களையும் நான் நினைவிற் கொள்கிறேன்.

தமிழினத்தின் விடிவுக்காக தன்னை அர்ப்பணித்த தந்தை செல்வா அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொழும்பு தெமட்டக் கொடையில் பிரார்த்தனையுடன் ஆரம்பித்துவைத்தோம். இன்று அன்னாரின் உருவச் சிலை திறப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாமல் போனதற்காகவும் வருந்துகின்றேன்.

இவ்வாறு அவர் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். தென்னிந்தி திருச்சபை பேராயர் அதிவண கலாநிதி என். ஜெபநேசன், மாவட்டபுரம் கந்தசாமி கோயில் பிரதம குரு மஹா ராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் ஆகியோரின் ஆசிச்செய்திகளும் வாசிக்கப்பட்டன.

விழாவில் செல்வாவின் உருவச்சிலையை வடித்த சிற்பி வி. சிவசுப்பிரமணியம், (ரமணி) தந்தையின் உருவப் படத்தை வரைந்த ஓவியர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இரசாயனப் பசளையை அதிகளவில் பயன்படுத்துவதால் சூழல் மாசடைவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

விவசாயிகள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளின் போது இரசாயனப் பசளைகளை அதிகளவில் பயன்படுத்துவதனால் சூழலில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்து திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பாடசாலை அதிபரும், உதவி விவசாயப் பணிப்பாளருமான ச. சின்னத்துரை பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்:

அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒரு குறிப்பிட்ட விளை நிலத்திலிருந்து கூடிய பயிர் உற்பத்தியைப் பெறுவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வெவ்வேறு தொழில் நுட்ப முறைகளுள் பசளைப் பிரயோகமும் ஒன்றாகும். தாவரம் ஆரோக்கியமாக வளர்ந்து தரமுள்ள கூடிய விளை பொருள்களைத் தருவதற்கு இயற்கைப் பசளையுடன் சிபார்சு செய்யப்பட்ட அளவில் இரசாயனப் பசளையையும் உபயோகித்தல் அவசியமானதாகும்.

ஆரம்ப காலத்தில் விவசாயிகள் கூடியளவில் இயற்கைப் பசளைகளை மாத்திரம் பாவித்துப் பயிர் செய்தனர். சனத்தொகை அதிகரிக்கத் தொடங்க உணவுத் தேவையும் அதிகரித்தது. இதனால் பண்டைய விவசாய முறைகளைக் குறைத்து நவீன விவசாயத் தொழில் நுட்பங்களைப் பாவித்து அதிக உற்பத்தியைப் பெறுவதற்கு ஆரம்பித்தனர். இரசாயனப் பசளைப் பிரயோகமும் நவீன விவசாயத் தொழில் நுட்பங்களில் ஒன்றாகும்.

விவசாயத் திணைக்களம் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற பிரதான மூலகங்கள் உள்ளடங்கலாக சமசீர்ப் பசளைப் பிரயோகத்தின் முக்கியத்துவத்தை முன் வைப்பதுடன் வெவ்வேறு பயிர்களுக்குத் தேவையான இந்த இரசாயனப் பசளைகளையும், அவைகள் இடப்பட வேண்டிய காலங்களையும் சிபார்சு செய்துவந்துள்ளது. தொடர்ந்தும் சிபார்சு செய்து வருகின்றது.

இரசாயனப் பசளையை உபயோகிக்க ஆரம்பித்த விவசாயிகள் குறிப்பிட்ட சிபார்சு செய்யப்பட்ட அளவிற்கு அதிகமாகவும், சமசீரற்ற முறையிலும் பாவித்ததால் மண்ணும் நீரும், பயிர்களும் பாதிப்படைந்து வந்துள்ளன, தொடர்ந்தும் இந்த இரசாயன உரங்களைக் கூடுதலாக உபயோகிப்போமானால் நம் இயற்கைவளங்கள் எல்லாம் பாதிப்படைந்து சூழலில் பாதகமான விளைவுகள் ஏற்படும். கூடுதலான இரசாயன உரங்களின் பாவனை பின்வரும் முறைகளில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

★ பயிருக்கு ஏற்ற சமசீர்ப் பசளைப் பிரயோகம் செய்யாவிடின் குறைவாக உள்ள மூலகம் பயிர்வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உற்பத்தியைக் குறைக்கின்றது.

★ நைதரசன் பசளையை (அமோனியம் சல்பேற் அல்லது யூறியா) கூடுதலாகப் பாவித்தால் பயிர்களின் புதிய வளர்ச்சி கூடுதலாக நடைபெறுவதுடன் பீடை/ நோய்களின் தாக்கங்களும் அதிகரிப்பதுடன் உற்பத்தியும் குறைகின்றது.

★ நைதரசன் பசளையை அளவுக்கு மேலதிகமாகப் பாவிக்கும்போது மேலதிக பசளை நீரில் கரைந்து தரைக்கீழ் நீருடன் கலப்பதால் குடிதண்ணீர் மாசடைகின்றது. நைதரேற் நச்சுத்தன்மையால் புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

★ அமோனியம் சல்பேற்றைக் கூடுதலாகப் பாவிக்கும் போது நிலம் அமிலத்தன்மையாக மாறுகின்றது.

★ நீர் வடிப்புத் தன்மை குறைவாக உள்ள உவர் நிலங்களில் கூடிய இரசாயனப் பசளைகளைப் பாவிக்கும்போது உவர்ப்புத்தன்மை மேலும் அதிகரிக்கின்றது.

★ மண்ணை வளமாக வைத்திருக்க உதவி செய்கின்ற மண்ணில் வாழுகின்ற பக்ரீறியா, பங்கஸ், அல்கா போன்ற நுண்ணங்கிகள் கூடிய இரசாயனப் பசளைப் பிரயோகத்தால் குறைக்கப்படுகின்றன. சில வேளைகளில் சாகடிக்கப்படுகின்றன.

★ மண்புழுக்கள் மண்ணை வளமாக்குகின்றன. கூடிய இரசாயன உரப்பாவனையால் இவைகளின் எண்ணிக்கை மிகக் குறைகின்றது.

மேற்குறிப்பிட்ட தாக்கங்களைக் குறைத்து பயிர் உற்பத்தியை அதிகரிக்கக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளாவன:—

★ மண்வளத்தைப்பேணிப் பாதுகாத்துத் தொடர்ச்சியாகப் பயிர்களிலிருந்து கூடிய உற்பத்தியைப் பெறுவதற்குக் கூடியளவில் இயற்கைப் பசளைகளான எருவகைகள், கூட்டெரு, பசுந்தாட்பசளை போன்றவற்றை மண்ணுடன் சேர்த்தல் வேண்டும். ஓர் ஏக்கருக்கு 8-10 தொன் [20 வண்டில்] இயற்கைப் பசளையை வருடாவருடம் இடுதல் வேண்டும்.

★ சமசீர் இரசாயன உரப்பாவனையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

★ ஒருங்கிணைந்த பசளைப் பிரயோக முகாமைத்துவத்துடன் நீர் முகாமைத்துவத்தையும் கடைப்பிடித்தல் வேண்டும். (இ-7-ரி)

### நாளை

சித்திரை 16

வியாழக்கிழமை

திதி: சதுர்த்தசி முன்இரவு 6.45 வரை.

நட்சத்திரம்: சித்திரை பின்னிரவு 1.58 வரை.

சுபநேரம்: 7.28-8.58

ராகுகாலம்: 1.28-2.58

[பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

### உதய வாக்கு

விடுதலை என்பது கயிறுகளை அறுப்பதில் அல்ல, மனத்தில்தான் ஆரம்பிக்கிறது.

- தாட்ஃபார்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா முத்துக்குமாரசாமி

( முன்னாள் மதுவரி அத்தியட்சகர் )

வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா முத்துக்குமாரசாமி 22 - 04 - 99 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சுகிர்தலக்ஷ்மியின் (மணி) அன்புக் கணவரும் சுகுமாரன் (லண்டன்), கௌரி சிவசுப்பிரமணியம் (கனடா), ஜெயசிறி நவரட்ணம் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28 04 99) புதன்கிழமை காலை 10 மணிக்கு வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும்.

தகவல்
**சுகிர்தலக்ஷ்மி [ மணி ]**
( மனைவி )

''கௌரி வாசா''
வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(65227)

### அந்தோனிப்பிள்ளை சிங்கராயர்

(இளைப்பாறிய அதிபர்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், தற்போது திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அ. சிங்கராயர் 24.04.99 அன்று திருகோணமலையில் காலமாகி விட்டார்.

அவரது மரணச் சடங்குகள் 26.04.99 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**J. A தேவராஜா**
(மருமகன்)

843, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(65222)

### கந்தப்பு பாலகிருஷ்ணன்

[சட்டத்தரணி—முருகேசு அன்ட் நீலகண்டன் கம்பனி கொழும்பு]

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு பாலகிருஷ்ணன் 26—04—1999 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற கந்தப்பு தம்பதிகளின் அருந்தவப் புதல்வனும், பார்த்தீபன் (கொழும்பு), பாமினி (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), பகீரதன் (ஹாட்லிக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லோகநாதன் (நீர்ப்பாசன பொறியியலாளர், பெரியமடு), பாலகிருஷ்ணன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரது அன்பு மைத்துனருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**பா. பகீரதன்**
(மகன)

''நாவலர் இல்லம்'',
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி

(65221)

### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

[ஓய்வுபெற்ற ஆசிரியர், குணபாலன் வித்தியாசாலை உயரப்புலம், ஆனைக்கோட்டை.]

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்தவருமான வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் 24—04—99 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான திரு. திருமதி வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி செல்லையா விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலையின் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி பராசக்தியின் அன்புக் கணவரும், தபோநிதி [லண்டன்], கலாநிதி [கனடா], முருகதாஸ் [லண்டன்], குகதாஸ் [கனடா], விமலதாஸ் [கனடா], சுந்தரதாஸ் [கனடா] ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அருணகுமார் [லண்டன்], விசாகராசா [கனடா], வாசுகி [லண்டன்], சுகுணகுமாரி [கனடா], சிவஷகி [கனடா], ஜெயந்தினி [கனடா] ஆகியோரின் ஆசை மாமனாரும், காலஞ் சென்ற அன்னம்மா, காலஞ்சென்ற செல்வராணி, சிதம்பரப்பிள்ளை, கந்தசாமி, பொன்னையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நிற்சிங்கப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லத்தம்பி, பரம்சோதி, பத்மநாதன், பொன்மணி, இரத்தினம், சரஸ்வதி, லீலாவதி, திவ்விய ரஞ்சனா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜனனி, கயாணன், சிந்துஜா, வைகுந்தன், கரிகரன், பிரியங்கா, வரணிகா, கோபிகா, பிரவின் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை [29-04 99] வியாழன் கனடாவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**திருமதி பராசக்தி சுப்பிரமணியம்** [மனைவி]
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**

Mrs P. Subramaniyam,
19, Edgeway Gate,
Scarborough,
Ont Miv IJ 6.
Canada.

[65220]

## சமய நிகழ்வுகளில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

உரும்பிராய்ஞானவைரவர் சுவாமி கோயிலில் நாளை வியாழக்கிழமை சித்திரகுப்த தினத்தை முன்னிட்டு காலை 10.00 மணியளவில் அபிஷேகமும் பூசையும் நடைபெற்று தொடர்ந்து சித்திரைக் கஞ்சி வழங்கப்படும். (க)

★ ★ ★

நல்லூர், ஏப்ரல் 28

திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீ நீலாயதாட்சி சமேத ஸ்ரீ காயாரோஹணர் சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 19 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் மே 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பஞ்ச இரதோற்சவமும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(இ-103)

★ ★ ★

சண்டிலிப்பாய், ஏப்ரல் 28

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய இரதோற்சவம் எதிர் வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 30 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

(ஐ-135)

★ ★ ★

நல்லூர், ஏப்ரல் 28

நாவாந்துறை புனித நீக்கிலஸ் ஆலய வருடாந்த திருப்பலித் திருநாள் நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும் திருப்பலிப் பூசை, திருச்சுருவப் பவனி, திருச் சுருவ ஆசிர்வாதம் என்பவற்றுடன் நிறைவு பெறும் 'திருப்பலிப் பூசைகளை பங்குத் தந்தை வண. பீற்றர் துரைரத்தினம் அடிகளார் ஒப்புக் கொடுப்பார் (இ-103)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 28

யாழ். வண்ணை அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து முற்பகல் 10மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்தலும், மறுநாள் வெள்ளி காலை சித்திரா பூரணை தினம் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும். 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5. 30 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகர பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பன்னிரு தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [க-173]

### தந்தை செல்வா...

(ஏழாம் பக்கத் தொடர்)

பெ. சுப்பிரமணியம் (மணியம்) ஆகியோருக்கு துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

தந்தை செல்வா நினைவுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

(சிலைதிறப்புவிழா குறித்த செய்தியும் பேச்சுக்களின் ஒரு பகுதியும் நேற்றைய உதயனில் வெளியானது தெரிந்ததே) (இ- 103)

## சிறுதானியச் செய்கை நல்ல விளைச்சல்

வலி. தென்மேற்கில் சிறுதானியச் செய்கை நல்ல விளைச்சல் தந்துள்ளதாக விவசாய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

எள், பயறு மற்றும் சிறுதானியங்களே நல்ல அதிக விளைச்சலைத் தந்துள்ளன.

இதேவேளை — வலி. தென்மேற்குப் பகுதியில் உள்ள சில இடங்களில் சிறுதானிய அறுவடையும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(இ-185)

## நுண் கருத்திட்டத்தின் கீழ் வீடு புனரமைக்க உதவி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

யாழ். குடாநாட்டில் மீளக் குடியேறிய— வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்தோரின் வீடுகளின் புனரமைப்புக்கென அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண் கருத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

வீடுகளின் புனரமைப்புப் பணிகளுக்கென இதுவரை எந்தவிதமான உதவிகளையும்பெறாத குடும்பங்களுக்கே தலா 10 ஆயிரம் ரூபாவை வீடுகளின் புனரமைப்புக்கென வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் —

இதற்கென ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் முன்னுரிமை அடிப்படையில் சுமார் 50 பேரின் பெயர் விவரங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறும் யாழ். செயலக திட்டமிடல் பிரிவு சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களைக் கோரியுள்ளது.

[இ-ரி-7 ]

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை லோகநாதன்

(நீர்ப்பாசனப் பொறியியலாளர், பெரியமடு)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை லோகநாதன் 24—04—99 அன்று இரவு 11-30 மணியளவில் காலமானார்.

அன்னார் விசாலாட்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற ச. முருகேசு (ஓய்வு பெற்ற A O), உமாதேவி தம்பதிகளின் மூத்த மருமகனும், நந்தகோபால் (பொறியியல் பீட முதலாம் ஆண்டு மாணவன் பேராதனைப் பல்கலைக் கழகம்), நிரஞ்சனா (பழைய மாணவி நெல்லியடி ம. ம. வி ) நந்தரூபன் (மாணவன் ஹாட்லிக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் திருமதி சரோஜினி தேவிபாலகிருஷ்ணன், சி. பாலகிருஷ்ணன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் க. பாலகிருஷ்ணன் (சட்ட ஆலோசகர், கொழும்பு), வா. அன்பரசி (லண்டன்). Dr. மு. சிவபாலன் (University of Western Australia) Dr. மு. சிவசங்கரம் (Economist, Canadianstate) மு. விநாயகமூர்த்தி (பொறியியலாளர் அமெரிக்கா), திருமதி கலைவாணி கைலாசநாதன் (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, திருமதி கலையரசி பாஸ்கரன் (கொழும்பு), செல்வி மு. கலாதேவி (ஆசிரியை, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி பானுமதி, சிவபாலன் கோபாலபிள்ளை, கைலாச நாதன் (தென்மராட்சிக் கல்வி வலயம்), நடராசா பாஸ்கரன் (கொழும்பு), திருமதி யசோதா விநாயகமூர்த்தி திருமதி வள்ளியம்மை சிவசங்கரம் ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-4-99) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 1 மணிக்கு சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்
**திருமதி வி. லோகநாதன்.**
(மனைவி)

கன்பொல்லை வீதி,
கரவெட்டி.

(65224)

### திருமதி வைத்திலிங்கம் திலகவதி

தாவடி தெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த வைத்திலிங்கம் திலகவதி 27 - 04 - 99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், அம்பலவாணர், சிவலிங்கம், கணேசலிங்கம் (சுவிஸ்), மகாலிங்கம், மனோன்மணி, இராகினி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசேந்திரன் (வர்த்தகர்), இரத்தினமூர்த்தி (சுகானன் ஸ்ரோர்ஸ் — சுன்னாகம்), இந்திரசேகரன் (சுவிஸ்), மங்கையர்க்கரசி, ஜெயலட்சுமி, தேவகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும், கிரிகரன் (சுவிஸ்), கிரிராஜ் (ஜேர்மனி), கிருபாலினி, கிருசாலினி, கோபிதரன், சர்மினி, கம்சாயினி, சசி, சகானன், சுகானன் (6 ஆம் ஆண்டு மாணவன், யாழ். இந்துக் கல்லூரி), சுஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28-04-99) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று, கோம்பயன்மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
**ம. இரத்தினமூர்த்தி**
(மருமகன்)

தாவடி தெற்கு,
கொக்குவில்.

(65218)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

யாழ். குடாநாட்டில் விற்பனை செய்யப்படும் பொருள்களின் விலை மற்றும் கட்டுப்பாடு, தரம் ஆகியவை தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 30 மணிக்கு யாழ். வணிகர் கழகத்தின் அலுவலகத்தில் நடைபெறும்.

இதில் யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகளும், யாழ் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

குடாநாட்டில் பொருள்களின் விற்பனை மற்றும் அவற்றுக்கான விலைகள், தரம் ஆகியன குறித்து நுகர்வோர் பாதுகாப்புச்சங்கம் அறிந்து கொள்ள விரும்பியதை அடுத்தே மேற்படி கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டதாக யாழ். வணிகர் சழகம் அறிவித்துள்ளது. [இ-7]

## திறப்பு விழா

'போரூட்' நிறுவன உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் மண்டபத் திறப்பு விழா இன்று புதன் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு சித்தன் கேணி போரூட் திட்ட இணைப்பாளர் க: குணேந்திரதாசன் பிரதம விருந்தினராகவும் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

# இனப்பிரச்சினையைத் தீர்க்க சமஷ்டி ஆட்சி முறையே வழி!

## சுவீடன் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் உரை

ஸ்ரொக்ஹோம், ஏப்ரல் 28

''இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமாயின் தற்போதுள்ள ஒற்றை ஆட்சி முறைக்குப்பதிலாக சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவர வேண்டும். அவ்வாறு ஆட்சி முறையை மாற்றுவதன் மூலம் தமிழர்கள் பரந்து வாழும் பிரதேசங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும்.''

அரசமைப்பு, நீதி, தேசிய நல்லிணக்க அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் சுவீடனில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

சுவீடனில் உள்ள உப்சலா பல்கலைக்கழகத்தில் ''இலங்கையில் இனப்பிரச்சினை; ஆட்சி முறையும் அரசியல் மட்டத்தில் வழங்கக் கூடிய தீர்வும்'' என்ற கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இருபது நாடுகளைச் சேர்ந்த கல்வி மான்களும், ஆராய்ச்சியாளர்களும், அரசியலாளர்களுமாக சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். அமைச்சர் பீரிஸ் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

''இலங்கையின் இப்போதைய அரசமைப்பு முறையிலுள்ள சில முட்டுக்கட்டைகள் காரணமாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இன்றி அரசாங்கம் தயாரித்துள்ள தீர்வுப் பொதியை நிறைவேற்ற முடியாத நிலை உள்ளது. அடுத்த பொதுத் தேர்தலில் அரசியல் தீர்வு குறித்த உண்மையை விளக்கி மக்களின் ஆதரவைப் பெற்று அதனை நிறைவேற்ற முடியும் என நாம் எதிர்பார்க்கின்றோம். அரசு முன்வைத்துள்ள தீர்வுப் பொதிக்கு மக்கள் ஆதரவைப் பெறுமுகமாக மக்கள் கருத்துக் கணிப்பொன்றை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டிருக்கையில் தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு இடம் பெற்றதனால் அம்முயற்சி தடைப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் மக்கள் விகிதாசாரத்துக்கு ஏற்ப அதிகாரப் பகிர்வை நடைமுறைப் படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இது சற்றுக் கடினமானது—என்றும் அமைச்சர் பீரிஸ் கருத்தரங்கில் தெரிவித்தார்.

கருத்தரங்கின் ''சமாதானமும் பிரச்சினைகளும்'' என்ற பிரிவுக்குத் தலைமை வகித்த உப்சலா பல்கலைக்கழகத்தின் இணைப்பேராசிரியர் அசோக் ஸ்வைன் தெரிவித்ததாவது:-

இலங்கையை ஆண்ட முன்னைய ஆட்சியாளர்கள் ஈழத் தமிழர்களின் பிரச்சினையை ஒற்றையாட்சி முறையால் தீர்க்க முடியாது என்பதனை விளங்கிக் கொண்டனர் என்றே நான் கருதுகின்றேன்.

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கவின் தீர்வுப் பொதியில் தமிழர்கள் தமது அலுவல்களைத் தமக்குத்தேவையான முறையில் செயற்படுத்திக் கொள்வதை உறுதிப்படுத்தும் முயற்சி தெரிகின்றது—என்று கூறினார்.

அமைச்சர் பீரிஸ் தம்மிடம் சுட்டிக் காட்டிய இன்னொரு விடயத்தையும் பேராசிரியர் அசோக் ஸ்வைன் குறிப்பிட்டார்.

இலங்கையின் ஒற்றையாட்சி முறையை ஐக்கிய பிராந்திய அரசுகளுக்கு மாற்ற வேண்டும். இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பிராந்திய அரசுகள் நல்ல முறையில் இயங்குகின்றன. ஆனால் இலங்கையில் நடைமுறையிலுள்ள ஒற்றையாட்சி முறைக்குப் பதிலாக மாற்று ஆட்சிமுறை ஒன்று இல்லாததால் பிராந்திய சபைகளை நடைமுறைப் படுத்துவதில் சிக்கல்கள் தோன்றி உள்ளதாக அமைச்சர் பீரிஸ் தம்மிடம் கூறியதாக — இணைப் பேராசிரியர் ஸ்வைன் சொன்னார். [உ-ரி]

## வலை வழங்கும் வைபவம்

வடமராட்சி, ஏப்ரல் 28

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் வடமராட்சியைச் சேர்ந்த நூறு மீனவர்களுக்கு வலை வழங்கும் நிகழ்வு இன்று மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றது.

ஒவ்வொரு மீனவருக்கும் ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் வழங்கப்படும். [உ-3 173]

## 68 வாகனங்களின் விவரங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட 'சூரியப் பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட 68 வாகனங்கள் தொடர்பான விவரங்களைப் படைத்தரப்பு யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ளது.

இந்த வாகனங்களின் உரிமையாளர்கள் அது தொடர்பான ஆவணங்களைத் தம்மிடம் சமர்பித்து உரிமையை அத்தாட்சிப்படுத்தினால், அவற்றைப் பெற்றுத்தர ஏற்பாடு செய்யப்படும் என்று அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த வாகனங்கள் தொடர்பான விவரங்களை 'உதயன்' அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (உ-3)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலைப் பழைய மாணவரும்
நலன் விரும்பியும்
பாடசாலையில் புலமைப் பரிசில் திட்டத்தை
அறிமுகப் படுத்தி அதற்குரிய உதவிகளை
வழங்கியவருமாகிய

**அமரர் ஆறுமுகம் செல்லையா**

அவர்களை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய நுணசை முருகனின் திருவடியை வேண்டி நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/நுணசை வித்தியாலயம்,
மாதகல். (65238)



**Institution of Engineers Centre**
**Northern Province**

**Annual General Meeting**

Date: 30-04-1999 Friday 10-00 A.M.
Venue: Maintenance Branch,
University of Jaffna

Members are Kindly Invited.

N. Devarajan
Secretary

(65236)



**கலைவாணி கல்வி நிலையம்**

கோப்பாய் வடக்கு கோப்பாய்

**O/L Day Class**

ஆரம்பமாகின்றது
03 — 05 — 99 காலை 8. 00

எமது வழமையான ஆசிரியர் குழு

கணிதம் — திரு. S. கமலதாசன்
— திரு. N. கபிலன்
விஞ்ஞானம் — திரு. S. சிறிஸ்கந்தராஜா
— திரு. சுரேஸ்
தமிழ் — திரு. இரா. விஜய்
ஆங்கிலம் — திரு. ஈஸ்வரமூர்த்தி
வரலாறு, சமூகக்கல்வி — திரு. S. ஜெகன்
வர்த்தகம் — திரு. S. ரூபன்
சமயம் — பிரபல ஆசிரியர்

குறிப்பு: கணித, விஞ்ஞான வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில நடைபெறும்.

(சி/7337)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

**தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி**
முதலாம் / இரண்டாம்

**அரையாண்டு பரீட்சை 1999**

மேற் குறிப்பிட்ட பரீட்சைகள் எதிர்வரும் 8-5-99, 15-5-99 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 05-05-99 க்கு முன்பாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு ரூபா 50 வீதம் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ அல்லது நிதியாளர், யாழ். பல்கலைக்கழகத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

மு.கு: மாணவர்கள் தங்களுக்குரிய அனுமதி அட்டையினை 7-5-99 ஆம் திகதி தொழிலாளர் கல்வி அலகு, யாழ். பல்கலைக் கழகத்தில் தமது தேசிய அடையாள அட்டையுடன் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

- பதிவாளர்

[சி/7334]


## மடுவுக்கு சமாதான யாத்திரை

வவுனியா, ஏப்ரல்28

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டி இரத்தினபுரியில் இருந்து புறப்பட்ட யாத்திரிகர்கள் கோஷ்டி நேற்று முன்தினம் மடுவை வந்தடைந்தது.

இரத்தினபுரி ஆயர் மல்க்கம் ரஞ்சித் தலைமையில் 280 பேர் சமாதான யாத்திரையாக மடுமாத ஆலயத்தை வந்தடைந்தனர்.

யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் எனக்கோரி இந்த யாத்திரை மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் குழுவினர் இன்று வரை மடுத்தேவாலயத்தில் தங்கியிருந்து வழிபாடுகளை மேற்கொள்வார்கள். மடுப் பிரதேசத்தை படையினர் கைப்பற்றிய பின்னர் தெற்கிலிருந்து வந்துள்ள முதலாவது குழு இதுவாகும். [இ-6-164]

## இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வரட்ணம் ஜெகன் என்ற இளைஞர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் தாம் கைது செய்துள்ளதாக 52 ஆவது டிவிஷன் படையணியினர் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவுக்கு நேற்று அறிவித்துள்ளனர். (உ-7)

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

யாழ். மாவட்டத்துக்குரிய — வெளியூர்த் தபால்கள் அடங்கிய — 57 தபாற்பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் நேற்று யாழ். எடுத்துவரப் பட்டன.

இதேவேளை குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 19 தபாற்பொதிகள் இதே கப்பல் மூலம் நேற்றைய தினம் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்றைய தினம் வந்து சேர்ந்த தபாற்பொதிகள் யாவும் இன்று முதல் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப் படும் என யாழ் பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். [உ-7-139]

## நிலாக் கால நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் நிலாக்கால நிகழ்ச்சி எதிர்வரும் வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு யாழ். கம்பன் கோட்டத்தில் பேராசிரியர் எஸ். சத்தியசீலன் தலைமையில் நடைபெறும்.

இம் மாதம் நிலாக்கால நிகழ்ச்சியாக இரா. செல்வவடிவேல் தலைமையில் சுழலும் சொற்போர் இடம் பெறும். (உ-3)

## பால்மா விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

பளைபகுதியிலுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் ஐந்நூறு மாணவர்களுக்கு இலவசப் பால்மா வழங்கும் வைபவம் இன்றுபுதன்கிழமை பளை மத்திய கல்லூரியில், பாடசாலை அதிபர் கே. குணபாலசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்த வைபவம் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ளது. (உ-ரி)


**கணிதம் - தரம் 9**
**பாட நூல்**
( புதிய பாடத்திட்டத்திற்கமைவானது )
பிரதி ஒன்று:- 110/-

கிடைக்குமிடம்: **கணித கழகம்,**
யாழ். மத்திய கல்லூரி.

(65242)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறிமா குஞ்சுகள்

பிறிமா வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள்
புறொயிலர் குஞ்சுகள் விநியோகிக்கப்படுகின்றது.

**29-04-99** வியாழக்கிழமை பேட்டுக் குஞ்சுகளும்
**03-05-99** திங்கட்கிழமை புறொயிலர் குஞ்சுகளும்
ஓடர்களுக்குத் தரப்படும்.

தொடர்பு: வை. சிவகுமார்
461, நாவலர் வீதி, (அத்தியடிச் சந்தி)
யாழ்ப்பாணம். (65217)



## யாழ்ப்பாண இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

நடத்தும்

## (முழு நிலா நாள் கருத்தரங்கு)

இடம்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்

காலம்; 30-04-1999 பிற்பகல் 3.30 மணி
[புதிய நேரம்]

தலைப்பு: "உத்தேச கல்விச் சீர்திருத்தமும் அதன் தாக்கங்களும்"

கருத்துரை வழங்குபவர்:
திரு அ. பஞ்சலிங்கம்
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

தலைமை; பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலை கழகம்)

அனைவரும் வருக!

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பிரசுர உதவி:-

**ராஜேந்திரா ஸ்ரோர்ஸ்**
192, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**ஜெஸ் கோ**
190, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2669 (சி/7330)



## Institute of Informatics Studies
Jaffna, Sri Lanka
(Affiliated with IMIS, U.K)

## Computer Courses

**New Batches Commence on 30 th April 1999 at 10.00 a.m.**

Diploma Courses:

1. Advanced Diploma in Applied Computer Science.
2. Diploma in Computer Programming.
3. Diploma in MS - Office.
4. Technician Diploma in Computer Hard ware.

Certificate Courses:

1. MS - WORD  2. MS - EXCEL  3. MS - ACCESS
4. AUTO CAD  5. VISUAL BASIC  6. C++
7. PAGE MAKER  8. COREL DRAW  9. PASCAL

Special classes for Teaching and other working Staff will be conducted on week days at 4.30 p.m. to 6.30 p.m.

For further details contact:

**Director**
Institute of Informatics Studies

- 100, Clock Tower Road, Jaffna.
- Navalar medam, Nelliyady.
- 'Circle Center', Chankanai.
- Nunavil East, Nunavil.

(C/7318)


## வெளியீடு

யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவ மன்றத்தின் 'பசுந்தோகை' சஞ்சிகையின் தோகை-2 வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேற்படி மாணவ மன்றத் தலைவர் பா. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும். (உ-4)

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்)

போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நாளை வியாழக்கிழமை ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக நிர்வாகஅதிகாரிகள் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் அவர்களுக்கான— நாளைய தினத்துக்குரிய சம்பளம் வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கும் செய்தி ஒன்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்றையதினம் சகல பல்கலைக் கழகங்களுக்கும் பக்ஸ் மூலம் அனுப்பி வைத்துள்ளது. (உ-3-7)

## 3 மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்)

வான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

குறித்த மீனவர்கள் மன்னாருக்கு அனுப்பி வைக்கப்படும் வரை ஈ. பி. டி. பியினரின் பராமரிப்பில் இருப்பர் எனவும் —

ஈ. பி. டி. பியினரே மேற்படி மீனவர்களை அனுப்பி வைப்பது குறித்த நடவடிக்கைகளைக் கடற்படையினரின்உதவியுடன்மேற்கொள்ள வேண்டுமெனவும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (உ-7)

## நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

உறுப்பினர்களை பொலீஸார் ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் ஆஜர் செய்தனர்.

கந்தையா நவரத்தினம், ரங்கன் கணேசன், தங்கராசா சுபத்திரன், செல்லக்கிளி மதியாபரணம் ஆகிய இந்த நான்கு பேரையும் தலா 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட சடலத்தைத் தகனம் செய்ய அனுமதித்ததாக கூறப்படும் அப்பகுதிக் கிராமசேவையாளருக்கு அறிவிக்கப்பட்டும், அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததினால் அவரைக் கைது செய்யுமாறும் நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார் (உ-173)


**எமது வீடியோ CD**
**( பிரமிட் )**
**வெளியீடுகள்!**

- ★ மக்களுக்காக
- ★ கொடி பறக்குது
- ★ அரச கட்டளை
- ★ ஜித்தன்
- ★ கள்ளழகர்

**ஐங்கரன் ஒறிஜினல் வெளியீடுகள்!**

- ★ சின்னத்துரை
- ★ ஆனந்த மழை
- ★ நேசிக்கிறேன்
- ★ உன்னைத் தேடி
- ★ நினைவிருக்கும்வரை
- ★ சின்ன ராஜா
- ★ அந்தி மந்தாரை

**எமது அடுத்த வெளியீடு!**

மோனிசா
என் மோனலிசா

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/7338)


## யுத்தம் நிறுத்தப்பட...

(முதலாம் பக்கத் தொடர்)

நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களுடனும் விரிவாகப்பேச்சுநடத்தியிருந்தனர்.

அப்போது தமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தூதுக் குழுவினரிடம் தெளிவுபடுத்தியிருந்தார்:

"தமிழ் மக்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ளவே போரிடுகின்றார்கள் யுத்தத்தை நடத்துவதும் செயற்படுத்துவதும் தொடர்வதும் இலங்கை அரசும் இராணுவமுமே ஆகவே அரசும் இராணுவமுமே யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை முன்னேடுக்க வேண்டும். 'சமாதானத்துக்கான யுத்தம்' 'சமாதானத்துக்கான முன்னெடுப்புகள்', 'தீர்வுப் பெட்டகம்' என்றெல்லாம் கூறும் இலங்கை அரசு தான் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்துக்கான சமிக்ஞையைக்காட்ட வேண்டும்" என்று அவர் தெரிவித்திருந்தார்.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் அடிப்படை அத்தியாவசிய வசதிகள், உணவுப் பொருள்கள், மருத்துவ - சுகாதார வசதிகள் இன்றி மக்கள் அல்லற்படுவதை நேரில் கண்டு சர்வமதக்குழு தனது அதிர்ச்சியை அப்போது வெளியிட்டிருந்தது.

வன்னி சென்ற வண. கம்புறுகமுவே வஜிததேரர், அங்கிலிகன் திருச்சபை ஆயர் வணக்கத்துக்குரிய கென்னத் பெர்னாண்டோ ஆகியோர் உட்பட 18 பேரடங்கிய சர்வ மத பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்தது. வன்னியில் தாங்கள் அவதானித்தவற்றை ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கிய தூதுக்குழுவினர் புலிகள் பேச்சுக்கு தயாரென்பதால் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்துக்கான பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு கோரினர்.

வன்னியில் அல்லற்படும் அப்பாவி மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யும்படியும் — அவர்கள் வலியுறுத்தினர்.

இக்கோரிக்கைகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி, யுத்த நிறுத்தம் குறித்தோ, சமாதானப் பேச்சுக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக் குறித்தோ பூடகமாகத்தானும்சமிக்ஞை எதனையும் காட்டவில்லை என்றும் தெரியவந்தது.

"எதிரி யுத்தம் நடத்திக் கொண்டிருக்கும் போது நாம் யுத்த நிறுத்தம் செய்வது எப்படி? சமாதானப் பேச்சுகளை உடைத்து யுத்தத்தை ஆரம்பித்தவர்கள் புலிகள் தான். பெரும்பாலான தமிழ் மக்கள் புலிகளை ஆதரிக்கவில்லை, தமிழ் மக்களில் இருந்து புலிகளை முற்றாகப் பிரிக்கவே யுத்தம் நடைபெறுகின்றது. எனவே யுத்தம் நிறுத்தப்பட மாட்டாது. — என்று திட்டவட்டமாக ஜனாதிபதி பதில் அளித்ததாக உறுதி செய்ய முடிந்தது

எனினும் வன்னியில் அல்லற்படும் மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகள், உணவு — மருத்துவ வசதி, எரிபொருள், விநியோகங்களுக்கான தடைகள் ஆகியவை குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார் எனத் தூதுக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்த விடயத்தை ஆராய்ந்து முடிவு எடுக்க ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில், பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சுக்களின் செயலாளர்கள், சம்பந்தப்பட்ட வன்னி மாவட்டங்களின் அரச அதிபர்கள் ஆகியோர் அடங்கிய ஒருகுழுவை அடுத்த ஒரு வாரத்துக்குள் தான் நியமிப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வமதக் குழு மீண்டும் ஒரு தடவை இராணுவக்கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்கு — அதாவது புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்துக்கு — விஜயம் செய்ய இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதி அனுமதி வழங்கியதாகவும் தெரியவந்தது. (உ-3-21)

## செஞ். செயலர்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர் முகாம் சென்று கணவனைப் பார்த்தார்.

கிஷோரின் விடுதலை குறித்து இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாட செஞ்சிலுவைச் சங்க உயர் மட்டக்குழு ஒன்று இன்று வவுனியா வருகின்றது.

## இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்)

களில் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேலான பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்து ஏமாற்றியதாகக் கூறப்படும் இளைஞரை அந்த இயக்கத்தினர் நேற்று முன்தினம் மீசாலையில் உள்ள வீடொன்றில் வைத்து பிடித்துச் சென்றுள்ளதாக அறியவந்தது.

பல வர்த்தகர்களும் பொது மக்களும் யாழ். அலுவலகத்திற்குக் கொடுத்த முறைப்பாட்டையடுத்து வான் ஒன்றில் வந்த புளொட் இயக்கத்தினர் இவரை பிடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

## உயிலங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

மேற்பட்ட பயணிகள் வவுனியாவில் தங்கியிருக்கின்றனர்.

வவுனியா செயலகத்தில் வைத்து இவர்கள் சோதனை செய்யப்பட்டு பஸ்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டு உயிலங்குளம் தடைமுகாமில் விடப்படுவர் என்றும் —

பயணிகள் அதன்பின் தாமாகவே அந்தப் பாதை ஊடாகச் செல்லலாம் என்றும் —

வவுனியாவில் தெரிவிக்கப்பட்டது. (உ-3-164)

## விடுவிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

தது தெரிந்ததே.

கடந்த மார்ச் 16 ஆம்திகதி விடுவிக்கப்பட்ட இவர்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரயாண அனுமதிக்காக இவ்வளவு நாள்களும் அங்கே காத்திருக்க வேண்டியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## தடை செய்யப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்றும் —

பாதசாரிகள், சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் மட்டும் செல்ல அனுமதிக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

## மகஜர்...

(முதலாம் பக்கத் தொடர்)

துக்குச் சென்று அந்த அமைப்புக்கு ஒரு மகஜரையும் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு விலாசமிடப்பட்ட ஒரு மகஜரையும் கையளித்தனர்.

ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கான மகஜரைத் தம்மால் ஏற்க முடியாது என்று தெரிவித்து அங்கிருந்த ஐ. நா. அதிகாரிகள் அதைத் திருப்பி பிரஜைகள் குழுவினரிடம் கொடுத்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகத்துக்குச் சென்ற பிரமுகர்கள் அந்த அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி, இலங்கை ஜனாதிபதி ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட மகஜர்களை அங்கு கையளித்தனர்.

போக்குவரத்துத் தடையால் பொது மக்கள் அனுபவிக்கும் கஷ்ரங்கள் அந்த மகஜரில் விவரிக்கப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 28-04-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org